மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள்:-

1) இந்த திட்டம் 'BSNL ஊழியர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம்' என அழைக்கப்படும்.

2) இதில் இணைவது, ஊழியர்களின் விருப்பம் சார்ந்தது. கண்டிப்பாக சேர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

3) இந்த திட்டம் தோராயமாக 01.05.2022 முதல் அமலுக்கு வரும்.

4) இதில் இணைய, ERP/ESS PORTALகளில் விருப்பம் தெரிவிக்க வேண்டும். எழுத்து பூர்வமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5) இதில் இணைவதற்கான ERP/ESS சாளரங்கள், 12.04.2022 அன்று திறக்கப்படும். இந்த திட்டத்தில் இணைய கடைசி நாள்: 18.04.2022

6) விருப்பம் தெரிவித்தவரகள், தங்கள் விருப்பத்தை 19.04.2022 முதல் 21.04.2022 வரை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

7) இதற்கான வருடாந்திர ப்ரீமியம் தொகை, ஊழியர்களின் ஏப்ரல் மாத ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

8) 5 லட்ச ரூபாய்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தில், பணியில் உள்ள அனைத்து ஊழியர்களும் இணைந்து கொள்ளலாம். அதற்கான வருடாந்திர ப்ரீமியம் தொகை கீழ்கண்டவாறு:-

விருப்பம் 1)

கணவன், மனைவி மற்றும் 3 குழந்தைகள் ஆகியோருக்கு- ரூ.16,041/-

விருப்பம் 2)

கணவன், மனைவி, 3 குழந்தைகள் மற்றும் ஒரு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.25,814/-

விருப்பம் 3)

கணவன், மனைவி, 3 குழந்தைகள் மற்றும் இரண்டு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ35,804/-

விருப்பம் 4)

கணவன் மற்றும் மனைவிக்கு மட்டும் - ரூ.15,233/-

விருப்பம் 5)

கணவன், மனைவி மற்றும் ஒரு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.25,005/-

விருப்பம் 6)

கணவன், மனைவி மற்றும் இரண்டு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.34,995/-

9) 10 லட்ச ரூபாய்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தில், பணியில் உள்ள 01.05.2022 அன்று E5 மற்றும் அதற்கு மேற்பட்ட ஊதிய விகிதத்தில் உள்ள ஊழியர்கள் மட்டும் இணைந்து கொள்ளலாம். வருடாந்திர ப்ரீமியம் தொகை கீழ்கண்டவாறு:-

விருப்பம் 7)

கணவன், மனைவி மற்றும் 3 குழந்தைகள் ஆகியோருக்கு- ரூ.24,061/-

விருப்பம் 8)

கணவன், மனைவி, 3 குழந்தைகள் மற்றும் ஒரு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.38,721/-

விருப்பம் 9)

கணவன், மனைவி, 3 குழந்தைகள் மற்றும் இரண்டு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.53,705/-

விருப்பம் 10)

கணவன் மற்றும் மனைவிக்கு மட்டும் - ரூ.22,858/-

விருப்பம் 11)

கணவன், மனைவி மற்றும் ஒரு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.37,517/-

விருப்பம் 12)

கணவன், மனைவி மற்றும் இரண்டு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.52,502/-

10) 5 லட்ச ரூபாய் காப்பீட்டுத் திட்டத்தில் மேலும் 5 லட்ச ரூபாய்களுக்கு Top Up செய்து கொள்வதற்கான கட்டணங்கள் வருமாறு:-

விருப்பம் 1)

கணவன், மனைவி மற்றும் 3 குழந்தைகள் ஆகியோருக்கு- ரூ.6,417/-

விருப்பம் 2)

கணவன், மனைவி, 3 குழந்தைகள் மற்றும் ஒரு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.10,325/-

விருப்பம் 3)

கணவன், மனைவி, 3 குழந்தைகள் மற்றும் இரண்டு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ14,322/-

விருப்பம் 4)

கணவன் மற்றும் மனைவிக்கு மட்டும் - ரூ.6,096/-

விருப்பம் 5)

கணவன், மனைவி மற்றும் ஒரு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.10,004/-

விருப்பம் 6)

கணவன், மனைவி மற்றும் இரண்டு பெற்றோர் ஆகியோருக்கு- ரூ.14,001/-

11) ஒரு பெற்றோர் என்றால், தாய் அல்லது தகப்பன் அல்லது மாமனார் அல்லது மாமியார், யாராவது ஒருவரை சேர்த்துக் கொள்ளலாம்.

12) இரண்டு பெற்றோர் என்றால் 'தாய் மற்றும் தகப்பன்' அல்லது 'மாமனார் மற்றும் மாமியார்' ஆகியவர்களை சேர்த்துக் கொள்ளலாம்.

13) குழந்தைகள் என்றால் 25 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மட்டுமே சேர்க்க இயலும். அதாவது 01.05.1997க்கு பின் பிறந்த குழந்தைகள் மட்டுமே சேர்த்துக் கொள்ள இயலும்.

14) 85 வயதுக்கு உட்பட்ட பெற்றோர்களை மட்டுமே சேர்த்துக் கொள்ள இயலும். அதாவது 01.05.1937க்கு பின் பிறந்த பெற்றோர்களை மட்டுமே சேர்த்துக் கொள்ள இயலும்.

15) இந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திற்கும், BSNL MRS திட்டத்திற்கும் தொடர்பு இல்லை. இரண்டும் தனித்தனியானது. BSNL MRS திட்டமும் நடைமுறையில் தொடரும்.

16) இந்த பாலிசி, அமலாக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு செயல்பாட்டில் இருக்கும். ஓராண்டு காலம் நிறைவுறும் சமயத்தில் இந்த பாலிசி, BSNL நிறுவனத்திற்கும், ORIENTAL ASSURANCE LIMITED நிறுவனத்திற்கும் இடையேயான உடன்பாட்டின் படியும், பிரீமியம் தொகையுடனும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

17) இந்த திட்டத்தில் இணைந்து ஓராண்டுக்குள், பணி ஓய்வு பெறும் தோழர்களுக்கு, இந்த ஓராண்டு இந்த திட்டம் அமலில் இருக்கும். பணி ஓய்விற்கு பின், இதே திட்டத்தில் தொடரலாம். ஆனால், அதற்கான புதுப்பித்தலுக்கான ப்ரீமியம் தொகை, காப்பீட்டு நிறுவனம் மற்றும் ஓய்வு பெற்ற நபர்களுக்கு இடையேயானதாக இருக்கும்.